செய்தி மக்கள் தொடர்பு துறை
செய்தி வெளியீடு எண் : 559 நாள் : 11/9

<u>பத்திரிக்கை செய்தி</u>

வேலூர் மாவட்டத்தில் காலியாகவுள்ள 1268 அங்கன்வாடி பணியாளர்கள், 38 குறுமைய அங்கன்வாடி பணியாளர்கள், 1210 அங்கன்வாடி உதவியாளர் பணியிடங்களுக்கு 13.09.17 முதல் 19.09.17 வரை நேர்காணல் நடைபெறும். நேர்காணல் நடைபெறும் நாள், இடம் மற்றும் நேரம் போன்றவை குறித்த விவரங்கள் தகுதியுள்ள விண்ணப்பதாரர்களுக்கு அழைப்புக் கடிதம் மூலம் அனுப்பப்பட்டுள்ளது.

நேர்காணல் கடிதம் கிடைக்கப் பெற்றவர்கள் மற்றும் விண்ணப்பம் அளித்து ஒப்புதல் சீட்டு கிடைக்கப்பெற்றவர்கள் நேர்காணலில் அன்றைய தினம் கலந்து கொள்ளலாம்.

நேர்காணல் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள சான்றுகள் மற்றும் ஆவணங்கள் வட்டார தேர்வு குழுவால் சரிபார்க்கப்படும். அங்கன்வாடி உதவியாளர் பணிக்கு விண்ணப்பிப்பவர்களுக்கு எழுத, படிக்கும் திறன் உள்ளதா என தேர்வுக் குழுவினரால் கண்டறியப்படும். நேர்காணல் கடிதம் பெறும் விண்ணப்பதாரர்கள் தவறாமல் நேர்காணலில் கலந்து கொள்ளமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

மாவட்ட ஆட்சித் தலைவருக்காக,

11/9/17 11/9/17

11/9/17
செ.ம.தொ.அ.
வேலூர்- 9.